அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் :111/2017

தேதி : 10/10/2017

### பொதுத்துறை நிறுவன ஊழியர்கள் அனைவருக்கும் சமமாக போனஸ் வழங்கவேண்டும்.

### அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத்தலைவர் ஆர்.சரத்குமார் வலியுறுத்தல்.

தமிழக அரசு பொதுத் துறை நிறுவன ஊழியர்களுக்கு தீபாவளி போனஸ் அறிவித்திருக்கிறது.

அதன்படி லாபத்தில் இயங்கும் நிறுவனங்களின் ஊழியர்களுக்கு 20 சதவிகிதம் என்றும், நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்களின் ஊழியர்களுக்கு 10 சதவிகிதம் என்றும் போனஸ் நிர்ணயித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு நிறுவனம் நஷ்டத்தில் இயங்குவதற்கு அதன் ஊழியர்கள் மட்டுமே காரணம் ஆகி விட முடியாது. லாப நஷ்டங்களை, நிர்வாகம், தொழில்நுட்பம், சந்தைப்படுத்துதல், நிதிநிர்வாக மேலாண்மை போன்ற பல்வேறு காரணிகள் தீர்மானிக்கின்றன.

எனவே நிறுவனங்களின் லாப நஷ்டங்களின் அடிப்படையில் தீர்மானிக்காமல், பொதுத்துறை நிறுவன ஊழியர்கள் அனைவருக்கும் சமமாக 20% போனஸ் வழங்கி அவர்கள் அனைவரும் மகிழ்ச்சியாக தீபாவளி பண்டிகை கொண்டாடும் வகையில் தமிழக அரசு முடிவெடுத்து அறிவிக்கவேண்டும் என்று அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்

என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத்தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com